செ.வெ.எண்:19 நாள்:13.02.2017

# பத்திரிக்கைச் செய்தி

நடப்பு ஆண்டில் பருவமழை பொய்த்ததால் கால்நடைகளுக்கு பசுந்தீவனம் தட்டுப்பாடின்றி தொடர்ச்சியாக அளித்திட பசுந்தீவன உற்பத்தியை பெருக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பின் மூலம் அரியலூர் மாவட்டத்தில் ரூபாய் மூன்று இலட்சம் செலவில் குறுகிய கால பசுந்தீவன உற்பத்தித் திட்டம் அமல்படுத்தப்பட்டடுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் குறுகிய காலத்தில், குறைந்த பாசன வசதியில் அதிக அறுவடை செய்யக்கூடிய தீவனச் சோளத்தினை விவசாயிகள் தங்கள் சொந்த நிலத்தில் பயிரிட்டு பயன் பெற முடியும். ஒரு ஏக்கர் பரப்பளவில் தீவனச்சோளம் உற்பத்தி செய்ய ஆகும் நடைமுறை செலவு ரூ4000/-ல் 50 சதவீதம் அரசு மானியமாக ஒரு ஏக்கருக்கு ரூ2000/-ம் மற்றும் ஏக்கருக்கு 16 கிலோ தீவன விதையும் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

தீவனச்சோளத்தினை விவசாயிகள் கால்நடைகளுக்கு பசுந்தீவனமாகவும் அல்லது உலர வைத்து சோளத்தட்டையாகவும் வழங்கலாம். விதைத்த 50 நாட்களில் ஒரு ஏக்கருக்கு 10 டன்கள் பசுந்தீவனமாக அறுவடை செய்யலாம். அவர்கள் பயிரிடும் தீவனம் சொந்த பயன்பாட்டிற்கு போக கால்நடை வளர்போருக்கு சந்தை விலையில் விற்பனையும் செய்து கொள்ளலாம்.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடைகளுக்கும் வறட்சி காலத்தில் பசுந்தீவனம் கிடைக்கும் பொருட்டு இத்திட்டம் 150 ஏக்கரில் அமுலாக்கப்படவுள்ளது.

எனவே அரியலூர் மாவட்டத்தில் சிறிதளவு தண்ணீர் பாசன வசதியுடன் குறைந்தபட்சம் 1 ஏக்கம் நிலம் உள்ள விவசாயிகள் அருகில் உள்ள கால்நடை மருந்தகங்களில் பிப்ரவரி 10-ம் தேதிக்குள் விண்ணப்பம் அளிக்குமாறு என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**